# குளச்சல் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் 29.07.2022 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்

**01.06.2022 ஆம் தேதிய அவசரக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருட்கள்**

## பொருள் எண்.1

இந்நகராட்சி பொறியியல் பிரிவில், குடிநீர் வினியோகப் பணிகளை மேற்கொள்வதற்கு 5 எண்ணம் தினக்கூலி பணியாளரகள் ஒப்பந்த அடிப்படையில் ஓர் ஆண்டிற்கு (2022-2023 ஆம் ஆண்டு) பணிக்கு அமர்த்துதல் பணியினை ரூ.9,80,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, கடந்த 25.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | திரு.A.பிரான்சீஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.33% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்க, குடிநீர் பணிகளின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று, பணி உத்தரவு வழங்கியுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : குடிநீர் பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.178-1/2022/இ1

**தீர்மானம் எண். 143**

**ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.2

இந்நகராட்சியில், உள்ளாட்சி தேர்தல் 2022 அவசரப் பணியின் காரணமாக அலுவலக வளாக கட்டிடங்களில் ஒரு பகுதிக்கு (நகர்மன்றக் கூடம், நகர்மன்றத் தலைவர் அறை மற்றும் அதனோடு சேர்ந்த பொறியியல் பிரிவு, கணணி அறை) வர்ணம் பூசப்பட்டது. ஏனைய பொதுப்பிரிவு, சுகாதாரப்பிரிவு, நகரமைப்பு பிரிவு கட்டிடங்கள் வர்ணம் பூசப்படாமல் உள்ளது. எனவே மேற்காணும் பிரிவு கட்டிடங்களில் வர்ணம் பூசும் பணியினை ரூ.2,30,000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.548/2022/இ1

**தீர்மானம் எண். 144**

**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்காமல், தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டது.**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்குட்பட்ட சன்னதி தெருவில் கோமதி டவுண் ஹால் அருகில் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ள சாலையில், சீரமைப்பு பணிகளை ரூ.2,10,000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2684 நாள் 21.01.2022-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 08.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.C.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2 | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.17% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.C.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.87-1/2021/இ1

**தீர்மானம் எண். 145**
**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.4

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் வசித்து வரும் திரு.P.R.பிரேம்ஜித் கௌதம் என்பவர் கடந்த 15 வருடங்களாக கன்னியாகுமரி மாவட்டத்தில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருவதாகவும், குளச்சல் நகராட்சி சட்ட ஆலோசகராக பணிபுரிய விரும்புவதால், தன்னை குளச்சல் நகராட்சியின் சட்ட ஆலோசகராக பணி நியமனம் செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டுள்ள வழக்கறிஞர் பட்டியலில், குளச்சல் நகராட்சிக்கு சட்ட ஆலோசகராக திரு.எஸ்.முத்து குமரேஷ் (Ms.1398/1993) பத்மநாபபுரம் என்பவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே குளச்சல் நகராட்சிக்கு சட்ட ஆலோசகரை தேர்வு செய்வது தொடர்பான மேல்நடவடிக்கைக்காக மேற்படி விவரங்கள் மன்றத்தின் தகவலுக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

ந.க.எண்.410/2022/இ1

**தீர்மானம் எண். 146**
**தீர்மானம் ரத்து செய்யப்பட்டது.**

**27.06.2022 ஆம் தேதிய சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருட்கள்**

## பொருள் எண்.1

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை செயல்முறைகள் ந.க.எண்.27519-38/2021/P2 நாள் 30.04.2022-ன் படி, இந்நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டம் : 2021-22-ன் கீழ், ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் (அரசு நிதி ரூ.3.43 இலட்சம் + பொது மக்கள் பங்களிப்பு ரூ.3.57 இலட்சம்) மரமடி குருசடி அருகில் அமைந்துள்ள பூங்காவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்காக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு, பொது மக்கள் பங்களிப்பு தொகை ரூ.3.57 இலட்சம் RTGS மூலம் நகராட்சி வங்கி கணக்கில் (NNT-Public Contribution) 27.05.2022-ல் பங்கு தந்தை, புனித காணிக்கை மாதா திருத்தலம், குளச்சல் அவர்களால் வரவாக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, மரமடி 5-ம் நம்பர் நிர்வாகம் சார்பாக திரு.எல்.ரெக்சன் என்பவருக்கு 30.05.2022-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1845/2021/இ1

**தீர்மானம் எண். 147**

**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் பல்வேறு இடங்களில், வடிகால் ஓடைகள் மற்றும் மேல்மூடிகள் சேதமடைந்துள்ளதால், பொது மக்களுக்கு இடையூறு ஏற்பட்டு வருகிறது. மேலும் பல தெருக்களில் வடிகால் ஓடையின் பக்கசுவர் உடைந்துள்ளதாலும், சிமெண்ட் தளம் மற்றும் பேவர் பிளாக் பழுதடைந்து குண்டும், குழியுமாக உள்ளதாலும், கழிவு நீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுவதால், சிமெண்ட் மற்றும் பேவர் பிளாக் சாலைகளில் ஒட்டுப்பணி (Patch work) மேற்கொள்வது மிகவும் அவசியமாக உள்ளது. எனவே 24 வார்டுகளிலும் வடிகால் ஓடை, மேல்மூடி மற்றும் சாலைப்பகுதிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு ஏதுவாக 2022-2023 ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளை ரூ.9,80,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.686/2022/இ1

**தீர்மானம் எண். 148**

**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.3

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் (ம) பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/4747/2021 நாள் 06.05.2022-ன் படி, இந்நகராட்சிக்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் : 2021-22-ன் கீழ், ரூ.8.70 இலட்சம் மதிப்பீட்டில், குளச்சல் துறைமுகத்திற்கு வெளியே துறைமுகத்தெருவில் மீனவர் ஓய்வறை அமைத்தல் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கான மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப அனுமதி பெற்று,

27.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.S.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 2 | திரு.C.சுரேஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.57% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, திட்டப்பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும்,பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.57/2022/இ1

**தீர்மானம் எண். 149**

**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

## பொருள் எண்.4

இந்நகராட்சியில், 15-வது நிதிக்குழு மானியம் (Tied Grant) 2021-22-ன் கீழ், ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டில், Purchase of Bailing machine and Sieving Machine for SWM purpose பணிக்கு, 09.06.2022 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் (6-வது அழைப்பு) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.Puliyoorsalai labour contract co-operative society Ltd, Mancode. | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | M/s.Green dreams India, Near Water tank road,Nagercoil. | மதிப்பீட்டை விட 4.65% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Puliyoorsalai labour contract co-operative society Ltd, Mancode நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி 10.06.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும்,பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1339/2021/இ1

**தீர்மானம் எண். 150**

**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

## பொருள் எண்.5

குளச்சல் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பரப்புரையாளர்கள் (ம) மேற்பார்வையாளர் தேர்வு செய்வதற்கு தகுதி வாய்ந்த நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை எண்.2187/2021/ஆ2 நாள் 25.08.2021 (ம) கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.6740/2017/எச்1 நாள் 10.06.2022-ல் தெரிவித்துள்ளபடி, நகராட்சி பங்கு தொகை ரூ.5,487/- கோவில்பட்டி நகராட்சிக்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1170/2021/எச்1

**தீர்மானம் எண். 151**
**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள்.24,25 வரிவிதிப்பு எண்கள் 148/2018063, 148/2018064 -ஐ திரு.T.சுந்தர் என்பவர் 2018 ஆண்டு ஏப்ரல் முதல் கடையினை மாத வாடகைக்கு எடுத்திருந்தார். மேற்படி இரண்டு கடைகளுக்கும் முன்வைப்புத் தொகையாக ரூ.2,00,000/- ம் கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.84,000/-ம் சேர்த்து ரூ.2,84,000/-ம் செலுத்தியுள்ளார். கடைகளுக்கு மாத வாடகை செப்டம்பர் 2021 முதல் ஜுன் 2022 வரைக்கும் ரூ.95,000/- நிலுவையாக உள்ளது. தற்போது இரண்டு கடைகளுக்கும் மாதவாடகையினை முன்வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்து மீதமுள்ள தொகையினை கேட்டுள்ளார். எனவே இரண்டு கடைகளுக்கான முன்வைப்புத் தொகை ரூ.2,84,000/-லிருந்து மாத வாடகை நிலுவைத் தொகை ரூ.95,000/- போக மீதமுள்ள தொகை ரூ.1,89,000/-ஐ அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண். 152**
**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.7

இந்நகராட்சி கண்காணிப்பு வாகனம் (ஈப்பு) TN 75 K 6526-ல் செல்ப் மோட்டார், டைனமோ மற்றும் முன்புற இரு சக்கரங்களிலும் உள்ள பிரேக் பேடு தேய்வு ஏற்பட்டு, பிரேக் பிடிக்காமலும், டைனமோ இயங்காமலும், பேட்டரி சார்ஜ் ஏறாமலும், செல்ப் மோட்டார் பிரஸ் ஹோல்டர் பழுது காரணமாகவும், வாகனத்தை இயக்க இயலாத நிலை ஏற்பட்டதை தொடர்ந்து, அவசர அவசியம் கருதி, வாகனத்தை பணிமனையில் கொண்டு சென்று பழுது நீக்கப்பணிகள் மேற்கொண்ட வகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.3350/-ஐ திரு.என்.செல்வகுமார் ஓட்டுநருக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.7057-1/2011/இ1

**தீர்மானம் எண். 153**
**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.8

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை செயல்முறைகள் ந.க.எண்.27519-41/2021/பி2 நாள் 31.05.2022-ன் படி, இந்நகராட்சியில், நமக்கு நாமே திட்டம் : 2021-22-ன் கீழ், துறைமுகத்தெரு போர் வெற்றி சின்னம் அருகில் மீனவர் ஓய்வறை அமைத்தல் பணியினை, ரூ.26.00 இலட்சம் மதிப்பீட்டில் (அரசு நிதி ரூ.12.74 + பொது மக்கள் பங்களிப்பு ரூ.13.26 இலட்சம்) மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்காணும் பணிக்கு பொது மக்கள் பங்களிப்பு தொகை ரூ.13.26 இலட்சம் பங்கு தந்தை, புனித காணிக்கை மாதா திருத்தலம், குளச்சல் என்பவரால் இந்தியன் வங்கி, குளச்சல் கிளையின் வங்கி கேட்பு வரைவோலை எண்.965357, 965358 நாள் 19.04.2022-ன் படி செலுத்தப்பட்டது. மேலும் மேற்காணும் பணிக்கான மதிப்பீட்டிற்கு, மண்டல செயற்பொறியாளர், திருநெல்வேலி செயல்முறைகள் ந.க.எண்.3184/2021/ஆ1 நாள் 07.06.2022 (ம.ப.எண்.147/ம.செ.பொ 2021-22)-ன் படி, தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, கடந்த 07.06.2022-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1845/2021/இ1

**தீர்மானம் எண். 154**
**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்குட்பட்ட நடுகள்ளியடைப்பு பகுதியில் மின்கம்பம் எண்.12 முதல் சிறுபாலம் வரை வடிகால் ஓடை சரி செய்தல் பணியினை ரூ.1,50,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.73 நாள் 01.06.2022-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 22.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.18% அதிகம் |
| 2. | திரு.எ.விஷ்ணுராம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எ.விஷ்ணுராம் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.556/2022/இ1

**தீர்மானம் எண். 155**
**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.10

இந்நகராட்சியில், 2022-23 ஆம் ஆண்டு குடிநீர் வினியோக வருடாந்திர பராமரிப்பு பணிகளை ரூ.9,50,000/- மதிப்பீட்டில், நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு, மன்றம் தனது தீர்மானம் எண்.80, நாள் 01.06.2022-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 22.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.94% அதிகம் |
| 2. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.546/2022/இ2

**தீர்மானம் எண். 156**

**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.11

இந்நகராட்சி உப்பளம் உரக்கிடங்கு பகுதியில், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பயன்பாட்டிலுள்ள Shredding Machine, Pulverisor, 1.5 HP Submercible Motor and Electric weighing Machine ஆகியவற்றில் பழுது நீக்கப்பணிகளை ரூ.50,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு, மன்றம் தனது தீர்மானம் எண்.73, நாள் 01.06.2022-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 22.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.பாபு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.66% அதிகம் |
| 2. | திரு.சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.13% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சுரேஷ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.13% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.547/2022/இ1

**தீர்மானம் எண். 157**

**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.12

இந்நகராட்சியில், 2022-2023 ஆம் ஆண்டு தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின் உபகரணங்களை வினியோகம் செய்தல் பணியின் ரூ.9,90,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு, மன்றம் தனது தீர்மானம் எண்.69, நாள் 01.06.2022-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 22.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.JES Electricals,<br>Trinity Complex,<br>Main Road, Trituapuram. | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 2. | M/s.JK Electricals,<br>Nattalam | மதிப்பீட்டை விட 3.46% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.JES Electricals, Trituapuram நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.544/2022/இ1

**தீர்மானம் எண். 158**
**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.13

இந்நகராட்சியில், 2022-2023 ஆம் ஆண்டு தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான 3 எண்ணம் பணியாளர்களை ரூ.615/- தினக்கூலியில் ஜுலை 2022 முதல் ஜுன் 2023 வரையிலான ஒரு வருடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில், பணிக்கு வழங்குதல் பணியினை ரூ.6,75,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.92, நாள் 01.06.2022-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 22.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.இரவீந்திரன்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | திரு.A.பிரான்சீஸ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.16% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T.இரவீந்திரன், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.658/2022/இ1

**தீர்மானம் எண். 159**
**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.14

இந்நகராட்சி உரக்கிடங்கில் மறுசுழற்சி செய்ய இயலாத Non Saleable Plastics திடக்கவுகள் JCB மூலம் சமன் செய்து உரிய பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி மன்றத் தீர்மானம் எண்.78, நாள் 01.06.2022-ன் படி, மறு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | உரிமையாளரின் பெயர் | தொகை ( 1 மணி நேரத்திற்கு) |
|---|---|---|
| 1. | திரு.S.ரமேஷ் குமார், சாஸ்தான்கரை, குளச்சல். | ரூ.810/- (GST உட்பட) |
| 2. | திரு.C.முருகன் கொம்பன்விளாகம், குளச்சல் | ரூ.830/- (GST உட்பட) |
| 3 | திரு.R.பாபு வெள்ளியாகுளம், குளச்சல் | ரூ.820/- (GST உட்பட) |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2 (ம) 3-ஐ விட வரிசை எண்.1, திரு.எஸ்.ரமேஷ் குமார் என்பவர் அளித்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி வழங்கிய மேற்படி நபருக்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்கு.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.480/2022/எச்1

**தீர்மானம் எண். 160**
**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.15

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தை ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் பேருந்து நிலையத்தில் மண் பரிசோதனை செய்து அதற்கான சான்றுடன் கருத்துரு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரி அலுவலர்களால் 25.04.2022 அன்று மண் பரிசோதனை செய்த வகையில் Equipments transport, Labour transport & skilled labour charges ஆகியவற்றிற்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூ.25,000/- பொதுப்பணி மேற்பார்வையாளரால் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 17.05.2022 ஆம் தேதிய புதிய பேருந்து நிலைய கட்டுமானம் தொடர்பான ஆய்வு கூட்ட அறிவுரையில், தற்போதைய பேருந்து நிலையத்தின் உறுதி தன்மை குறித்த சான்று பெற்று சமர்ப்பிக்க

தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரி அலுவலர்களால் 22.05.2022 அன்று பேருந்து நிலையத்தின் உறுதி தன்மை பரிசோதனை செய்த வகையில், Skilled labour & Transport charges-க்காக ரூ.16,000/- பொதுப்பணி மேற்பார்வையாளரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மண் பரிசோதனை செலவினம் ரூ.25,000 + பேருந்து நிலைய உறுதி தன்மை சான்று செலவினம் ரூ.16,000/- சேர்த்து மொத்தம் ரூ.41,000/- ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து பொதுப்பணி மேற்பார்வையாளருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.498/2022/இ1

**தீர்மானம் எண். 161**

**ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.16

நகர்மன்றத் துணைத்தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 9-வது வார்டில் காந்தி ஜங்சன் பகுதியில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திரு உருவ சிலையினை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 வாய்க்கால் தெருவில் கதவு எண்.25-8 அருகில் அமைந்துள்ள 3 அடி வீதி உள்ள குறுக்கு தெருவின் பின்புறம் உள்ள வீடுகளுக்கு செல்வதற்கு வசதியாக சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9 வாய்க்கால் தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலையில் தெருவிளக்கு இல்லாமல் உள்ளது. எனவே மேற்படி சாலையில் அமைந்துள்ள F2-13, F2-15, F2-16 ஆகிய மின் கம்பங்களில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 வாய்க்கால் தெருவில் திரு.சார்லஸ் ஆசிரியர் வீட்டின் முன்புறம் உள்ள 4 அடி வழிபாதையில் குடிநீர் குழாய் மற்றும் சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 களிமார் பாலத்தின் பக்கத்தில் முண்டன்பிலாவடிக்கு திரும்பும் பாதையில் போடப்பட்டுள்ள சிமெண்ட் காங்கிரீட் தளத்தில் சாலையிலிருந்து இறங்கம் வாகனங்கள் செல்ல முடியாத வகையில் மிகவும் தாழ்வாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
6. குளச்சல் நகராட்சி அலுவலக வளாகம் முதல் காந்தி ஜங்சன் வரை மற்றும் காந்தி ஜங்சன் முதல் பீச் ஜங்சன் வரை பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகள் நடந்து செல்வதற்கு வசதியாக சாலை இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, கைப்பிடியுடன் கூடிய நடைபாதை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 160**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.17

1-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஷீலா ஜெயந்தி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் பகுதியில் பாம்பூரி வாய்க்காலில் ஆண்கள் குளிக்குமிடத்தில் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் நகராட்சியால் கட்டி கொடுக்கப்பட்ட படித்துறை தற்போது மிக மோசமாக பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. மேற்படி இடம் ஆண்கள் தினந்தோறும் குளிக்கும் பகுதியாக உள்ளதால், பொது மக்கள் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, படித்துறையை புதிதாக கட்டுவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

2. சாஸ்தான்கரை அரசு பள்ளி அருகில் அமைந்துள்ள மழை நீர் வடிகால் ஓடையில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு சாக்கடையாக மாறியுள்ளது. எனவே மேற்படி வடிகால் ஓடையினை தூர் வாரி சுத்தம் செய்தும், பொது மக்கள் பயன்பாட்டிற்கு சிமெண்ட் சாலை அமைக்கவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

3. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக குளச்சல் பணிமனை பின்புறம் உள்ள வடிகால் ஓடையில் பணிமனையில் கழிவு ஆயில், தேவையற்ற பொருட்கள் போன்றவை வெளியேற்றப்படுவதால், துர் நாற்றம் வீசி வருகிறது. எனவே அப்பகுதி மக்களின் நலன் கருதி, மேற்படி மழை நீர் வடிகால் ஓடையை சுத்தம் செய்து சீரமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

4. வார்டு எண்.1 தைநாத்தன்கரை மண் சாலையை உடனடியாக சீரமைத்து, மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் சிமெண்ட் சாலையாக மாற்றும் பணியினை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 163**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.18

3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எஸ்.ரமேஷ் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3-ல் திருவள்ளுவர் சாலையிலிருந்து கதவு எண்.2-137, 2-137/1 ஆகிய வீடுகளுக்கு முன்புறமாக செல்லும் சிமெண்ட் காங்கிரீட் சாலை மிக மோசமாக பழுதடைந்துள்ளதால், மேற்படி சாலையின் நடுவே மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய புதிய சிமெண்ட் காங்கிரீட் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அழகுவிளை பகுதியில் கதவு எண்.2-149, 2-142 ஆகிய வீடுகளுக்கு முன்புறமாக செல்லும் சிமெண்ட் காங்கிரீட் சாலை மிக மோசமாக பழுதடைந்துள்ளால், மேற்படி சாலையின் நடுவே மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய புதிய சிமெண்ட் காங்கிரீட் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அழகுவிளை பகுதியில் கதவு எண்.2-150/4, 2-150/13 ஆகிய வீடுகளுக்கு முன்புறமாக செல்லும் சிமெண்ட் காங்கிரீட் சாலை மிக மோசமாக பழுதடைந்துள்ளால், மேற்படி சாலையின் நடுவே மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய புதிய சிமெண்ட் காங்கிரீட் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தெற்கு கள்ளியடைப்பு பகுதியில் கதவு எண்.1-171/32, 1-171/7 ஆகிய வீடுகளுக்கு முன்புறமாக செல்லும் மண் சாலை மிக மோசமாக உள்ளதால், மேற்படி சாலையை மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய புதிய சிமெண்ட் காங்கிரீட் சாலையாக மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தெற்கு கள்ளியடைப்பு பகுதியில் கதவு எண்.1-161,1-168 ஆகிய வீடுகளுக்கு முன்புறமாக செல்லும் மழை நீர் வடிகால் ஓடையானது குறுகியதாக

அமைக்கப்பட்டுள்ளதால், மழை காலங்களில் மழை நீர் வடிகால் ஓடை வழியாக செல்லாமல், வீடுகளுக்குள் புகுந்து சேதத்தை ஏற்படுத்துகிறது. எனவே மேற்படி மழைநீர் வடிகால் ஓடையை சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

6. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தெற்கு கள்ளியடைப்பு காருண்யா நர்சரி பள்ளி முன்பாக அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலை மிகவும் பழுதடைந்து மோசமாக உள்ளதால், பொது மக்கள் பயன்பாட்டிற்காக மேற்படி சாலையின் நடுவே மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய புதிய சிமெண்ட் காங்கிரீட் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

7. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வலியவிளை பகுதியில் கதவு எண்.2-6A வீடுவரை செல்லும் மண்சாலையை சிமெண்ட் காங்கிரீட் சாலையாக மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

8. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வலியவிளை பகுதியில் கதவு எண்.1-142/6 வீடுவரை செல்லும் மண்சாலையை சிமெண்ட் காங்கிரீட் சாலையாக மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

9. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை மெயின் ரோட்டிலிருந்து கதவு எண். 1-67/2, 1-67/5 ஆகிய வீடுகளுக்கு முன்புறமாக செல்லும் மண் சாலையை சிமெண்ட் காங்கிரீட் சாலையாக மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

10. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஜெயபால் காம்பவுண்ட் பகுதியில் கதவு எண்.1-164/5 வீட்டின் முன்புறமாக செல்லும் மண் சாலையை சிமெண்ட் காங்கிரீட் சாலையாக மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

11. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் தெருவில் அமைந்துள்ள மின்கம்பம் எண். F1-20, F1-25 ஆகியவற்றில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

12. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தெற்கு கள்ளியடைப்பு ஸ்ரீவிரபத்திரகாளி அம்மன் கோவிலுக்கு எதிர்புறமாக செல்லும் மின்கம்பம் எண்கள். 7,8,9,10 ஆகியவற்றில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்

13. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஜெயபால் காம்பவுண்ட் பகுதியில் அமைந்துள்ள மின்கம்பம் எண்கள். 8,10,14,15,16,19,20 ஆகியவற்றில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

14. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வலியவிளை பகுதியில் கதவு எண்.2-6A வீட்டிற்கு செல்லும் வழியில் உள்ள இரண்டு மின்கம்பங்களில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

15. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை மெயின் ரோட்டிலிருந்து கதவு எண். 1-67/2 வீட்டின் முன்புறம் உள்ள மின்கம்பத்தில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 164**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.19

6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஷே.குறைஷா பீவி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் பின்புறத்தில் அமைந்துள்ள நியாய விலை கடை எண்.2444 CB002-ன் முன்புறம் திறந்த வெளியாக இருப்பதால், மழை மற்றும் வெயில் காலங்களில் பயனாளிகள் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். எனவே பொது நலன் கருதி, மேற்படி கடையின் முன்புறம் நிழற்பந்தல் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 165**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.20

7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.து.தனலெட்சுமி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7-ல் அமைந்துள்ள காமராஜர் சாலை - மார்க்கெட் ரோடு பின்புற இணைப்பு சாலையை சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நரிக்கலில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் வர்ணம் பூசுதல் மற்றும் Gate அமைத்தல் பணிகளை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.
3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ உஜ்ஜைனி மாகாளி அம்மன் கோவில் அருகில் சோடியம் ஆவி விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் நாகராஜா கோவில் சந்திப்பில் தெருப்பெயரை குறிக்கும் வகையில் வழிகாட்டும் பலகை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தையில் அமைந்துள்ள வணிகவளாகத்தில் செயல்படும் குளச்சல் கிளை நூலகத்தை, அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்தும் வகையில் அம்மா உணவகம் அருகில் உள்ள காலியிடத்தில் (தீயணைப்பு வாகனம் நிறுத்துமிடம்) மாற்றியமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
6. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலை சந்திப்பு, நரிக்கல் சந்திப்பு, பள்ளி வளாகம் மற்றும் மார்க்கெட் சாலை சந்திப்பு ஆகிய பகுதிகளில் திருட்டு சம்பவங்கள் அதிகமாக நடப்பதால், மேற்காணும் சந்திப்புகளில் கண்காணிப்பு கேமரா அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
7. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஏற்கனவே இருந்த அரசு மதுபான கடைகள் மற்றும் தனியார் பார் செயல்பட்டு வரும் நிலையில், புதிதாக .குளச்சல் பேருந்து நிலையத்தின் அருகில் எந்த ஒரு மதுபான கடையும் திறக்க கூடாது என மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 166**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.21

8-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.செ.வினேஷ் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் நாகராஜா கோவில் பின்பகுதியில் பாம்பூரி வாய்க்கால் படித்துறைக்கு செல்லும் வழியில் அமைந்துள்ள 2 மின்கம்பங்கள் கடந்த 2017 ஆம் ஆண்டு ஒக்கி புயலினால் சேதமடைந்தது. மேற்படி மின்கம்பங்கள் இதுநாள் வரை சரிசெய்யப்படாமல் உள்ளதால், பொது மக்கள் நலன் கருதி, புதிதாக 2 மின்கம்பங்கள் அமைத்து, தெருவிளக்கு வசதி செய்யவும், மேற்படி படித்துறைக்கு செல்லும்

நடைபாதையானது மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதை சீரமைக்கவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

2. களிமார் கனியாகுடி பகுதியில் பல இடங்களில் மழை நீர் வடிகால் ஓடையின் மேல்மூடிகள் சேதமடைந்துள்ளது. அதிலும் குறிப்பாக 3 இடங்களில் மேல்மூடிகள் முழுமையாக உடைந்துள்ளது. எனவே மேற்படி வடிகால் ஓடை மேல்மூடிகளை விரைந்து சரி செய்வதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

3. கனியாகுடி பகுதியில் பாம்பூரி வாய்க்காலில் மிகவும் பழமையான படித்துறை அமைந்துள்ளது. மேற்படி படித்துறையை தினந்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் பயன்படுத்தி வரும் நிலையில், படித்துறை சேதமடைந்துள்ளதால், பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பகுதியில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் புதிதாக படித்துறை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

4. நரிக்கல் நாகராஜா கோவில் பின்புறம் உள்ள தெருவில் 15-க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளது. மேற்படி தெருவில் உள்ள சாலையில் மழை காலங்களில் மழை நீர் வெளியற வழியின்றி வீடுகளுக்கு முன் தேங்கி வருகிறது. இதனால் அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றார்கள். எனவே மேற்படி பகுதியில் மழைநீர் தேங்காத வண்ணம் சாலையை சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஏற்கனவே இரண்டு அரசு மதுபான கடையும் ஒரு தனியார் மதுபான கடையும் உள்ளது. மேற்காணும் மூன்று மதுபான கடைகள் இருந்த போதிலும், குளச்சல் பேருந்து நிலையம் அருகில், மக்கள் குடியிருப்பு பகுதியில் புதிதாக மதுபான கடை அமைக்க முயற்சிப்பதை நகராட்சி சார்பாக அனுமதி மறுக்கப்பட வேண்டும். எனவே மேற்படி பொருள் தொடர்பாக மன்ற தீர்மானம் நிறைவேற்றி டாஸ்மார்க் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 167**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண்.22

13-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பி.சந்திர வயோலா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 13-வது வார்டு பர்னட்டிவிளை பகுதியில் அமைந்துள்ள சோடா கம்பெனி முன்புறம் மழைநீர் வடிகால் ஓடையில் தண்ணீர் சீராக செல்லாமல் தேங்கி நிற்பதால், சுகாதார கேடு ஏற்பட்டு வருகிறது. மேலும் வி.கே.பி பள்ளிக்கூடம் எதிர்புறம் அமைந்துள்ள மழைநீர் வடிகால் ஓடை பழுதடைந்துள்ளதால், தண்ணீர் சாலையின் மேற்பரப்பில் பாய்ந்து, சுகாதார கேடு ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி 2 மழைநீர் வடிகால் ஓடைகளையும் சீரமைத்து, மேல்மூடிஅமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

2. பார்னட்டிவிளை பகுதியில் கதவு எண்.2-212/1 முதல் 2-248 வரை உள்ள பகுதிகளில் பேவர் பிளாக் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

3. பொட்டல்விளை பகுதியில் கதவு எண்.2-260/4 முதல் 2-260/8 வரை உள்ள பகுதிகளில் தார் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

4. வி.கே.பி பள்ளிக்கூட பேருந்து நிறுத்தம் அருகில் புதிதாக சோடியம் ஆவி விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 168**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.23

14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.A.அஜின் ரூத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சி 14-வது வார்டிற்க்குட்பட்ட பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் சுமார் 1000-க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்களுக்கு நோய்கள் ஏற்பட்டால், சிகிட்சை பெறுவதற்கு அரசு மருத்துவமனை வெகு தொலைவில் உள்ளதால், இப்பகுதி மக்கள் மிகுந்த அவதிப்பட்டு வருகின்றனர். மேற்படி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடம் ஒன்று அமைந்துள்ளதில்,ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தால் மக்கள் பயனடைவார்கள்.எனவே பொது மக்கள் நலன் கருதி, மேற்படி சமுதாய கூடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 169**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.24

15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.M.அப்துல் ரஹீம் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 குழந்தையேசு காலனியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், புதிதாக ரேஷன் கடை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதியானது சுனாமியால் பாதிக்கப்பட்ட சுமார் 700 குடும்பங்கள் வசிக்கும் பகுதியாகும். இவர்கள் குடும்ப அட்டைகள் அனைத்தும் குளச்சல் துறைமுகப்பகுதி ரேஷன் கடையில் உள்ளதால், இவர்கள் வசிக்கும் பகுதிக்கும், ரேஷன் கடைக்கும் இடையே சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. எனவே ஆசாத் நகர், தோழமை காலனி, வான்மலர் காலனி, குழந்தை யேசு காலனி பகுதி மக்களின் நலன் கருதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், கட்டி முடிக்கப்பட்டுள்ள ரேஷன் கடையை உடனடியாக திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அரசை வலியுறுத்தி மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 170**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.25

16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சு.அ.சுஜித்ரா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் கொம்பன்விளாகம் மின்கம்பம் F1-7, சன்னதி தெரு மின்கம்பம் F1-10, விவேகானந்தா சாலை மின்கம்பம் F2-5 ஆகியவற்றில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 (காஜா கடை முன்புறம்) ஆசாரி தெருவில் சிமெண்ட் தளம் மிக மோசமான நிலையில் உள்ளது. மேலும் வடிகால் ஓடையும் சேதமடைந்துள்ளதால், அதன் மேல்மூடிகளை புதிதாக மாற்றியமைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மேலத்தெரு முத்தாரம்மன் கோவில் பின்புறத்திலிருந்து சுரேஷ் செட்டியார் வீடு வரை சிமெண்ட் தளம் குண்டும், குழியுமாக உள்ளதால், அதனை உடனடியாக சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் கொம்பன்விளாகம் பகுதி கண்ணம் பெப்ஸி வீட்டின் பின்புறம் உள்ள மண்சாலையினை சிமெண்ட் தளமாக அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் தும்பக்காடு சதாசிவன் வீடு முன்புறத்தில் மின்கம்பம் FL-25 பழுதடைந்து மிக மோசமாக நிலையில் உள்ளதை, உடனடியாக மாற்றியமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

6. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் சன்னதி தெரு முத்தாரம்மன் திருக்கோவில் அருகில் மின்கம்பம் F2-7 மிகவும் மோசமாக பழுதடைந்து சாய்ந்து விழும் நிலையில் உள்ளதை உடனடியாக மாற்றியமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

7. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் ஆசாரிமார் தெரு ராஜன் வீடு முன்புறத்தில் அமைந்துள்ள மின்கம்பம் F1-34 (புதிய எண்.F2-30) பழுதடைந்துள்ளதை உடனடியாக மாற்றியமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 171**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.26

19-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஜி.திலகா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மாதா காலனியில் அமைந்துள்ள லூர்தம்மாள் சைமன் விசைப்படகு சங்கத்தின் முன்புறம் கதவு எண்.15-157/1 முதல் 15-156/1 முடிய உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் ஓடையில் தண்ணீர் சீராக செல்லாமல் அடைப்பு ஏற்பட்டுள்ளதை சரி செய்வதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மாதா காலனி பகுதியில் கதவு எண்.25-68 முதல் புனித மரியன்னை தொடக்கப்பள்ளி பின்புறம் வரை மழைநீர் ஓடையின் வழியாக தண்ணீர் வீட்டிற்குள் புகுவதால், மேற்படி வடிகால் ஓடையினை சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மாதா காலனி பகுதியில் கதவு எண்.18-162/5 முதல் 18-162/-3 வரை ஏற்கனவே மழைநீர் வடிகால் ஓடை கட்டப்பட்டு, இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் மழை காலங்களில் மழை நீர் அருகிலுள்ள வீடுகளுக்குள் புகுவதால், அதனை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மாதா காலனி பகுதியில் புனித மேரி தொடக்கப்பள்ளி முன்புறம் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் வடக்கு பக்கம் ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டள்ள 4 மின்கம்பங்களில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வாய்க்கால் தெரு தொடங்கி பாம்பூரி வாய்க்கால் ஓராமாக குளச்சல் - சைமன்காலனி இணைப்பு பாலம் வரை சாலையின் ஓரத்தில் அமைந்துள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 172**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.27

20-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.F.லாரன்ஸ் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 துறைமுகத்தெரு 1-ல் கதவு எண்.14-87 மற்றும் 15-47 முதல் 15-56A வரை போடப்பட்டுள்ள மழை நீர் வடிகால் ஓடையில் ஆங்காங்கே மண் அடைபட்டு கிடப்பதால், அதனை தூர் வாரி சுத்தம் செய்து சீரமைக்கவும்,

மேற்படி வடிகால் ஓடையில் போடப்பட்டுள்ள பேவர் பிளாக் மற்றும் சிமெண்ட் தளங்களை சீரமைக்கவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு 2-ல் கடல் அரிப்பு தடுப்புச்சுவர் அருகாமையில் கதவு எண்.14-15 முதல் துறைமுகம் மேற்கு பக்கம் வரை அமைந்துள்ள 3 மழை நீர் வடிகால் ஓடைகளிலும் தண்ணீர் கடலில் செல்கிறது. மேற்படி வடிகால் ஓடைகளில் அடிக்கடி கடல் மண் அடைபடுவதால், தண்ணீர் தேங்கி சுகாதார கேடு ஏற்பட்டுள்ளது. இதனால் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். எனவே மேற்படி வடிகால் ஓடைகளை இணைப்பதற்கு உறிஞ்சு குழி அமைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 173**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.28

21-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.மேரி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21-ல் துறைமுகத்தெரு கதவு எண்.15-57-ன் அருகில் பேவர் பிளாக் பள்ளம் விழுந்து கிடப்பதால், பொது மக்களுக்கு இடையூறாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் பேவர் பிளாக் தளத்தை சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21-ல் துறைமுகத்தெரு கதவு எண்.19-30-ன் அருகில் மழைநீர் வடிகால் ஓடை உடைந்து, பொது மக்களுக்கு இடையூறு ஏற்பட்டு வருவதால், அதனை தூர் வாரி சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21-ல் கதவு எண்.19-3-ன் முன்புறம் மின்கம்பம் மிக மோசமாக பழுதடைந்து கீழே விழும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி மின்கம்பத்தை மாற்றியமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21-ல் கதவு எண்.19-3-ன் முன்புறம் (மீனவர் கூட்டுறவு சங்க சாலை) செல்லும் சாலையில் பேவர் பிளாக் மன்றம் தீர்மானிக்கலாம்

**தீர்மானம் எண். 174**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.29

22-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சா.ஜாண்சன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22-ல் அமைந்துள்ள மீனவர் ஓய்வறையை சுற்றி, செடி, கொடிகள் வளர்ந்துள்ளதால், மீனவர்கள் மேற்படி ஓய்வறையை பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே மேற்படி பகுதியில் செடி, கொடிகளை அகற்றி வண்ணக்கற்கள் பதிக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு 4-ல்துறைமுகத்தின் மேற்கு பகுதியில் (பழைய மீன் விற்பனை கூடம் அருகில்) சாலையிலிருந்து துறைமுகம் செல்லும் குறுக்கு தெருவில் இருசக்கர வாகனங்கள் அதிகமாக உபயோகப்படுத்தப்படுவதால், சாலையில் பதிக்கப்பட்டுள்ள வண்ணக்கற்கள் பெயர்ந்துள்ளதை பொது நலன் கருதி, சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகச்சாலையின் வடக்கு பக்கம் அமைந்துள்ள மழைநீர் வடிகால் ஓடை பழுதடைந்து அடைப்புகள் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி வடிகால் ஓடையினை முழுவதுமாக சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 175**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.30

23-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.A.ஜாண் பிரிட்டோ அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23-ல் ரேஷன் கடை அருகாமையில் அமைந்துள்ள மழை நீர் வடிகால் ஓடையினை சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மரமடி தெருவில் 3 இடங்களில் 8x12 அளவில் பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பீச் ஜங்சனில் அமைந்துள்ள பொது கழிவறை பயன்பாடற்ற நிலையில் உள்ளதால், அதனை இடித்து அகற்ற மன்றம் தீர்மானிக்கலாம்.

4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மரமடி பகுதியில் அமைந்துள்ள 2 அங்கன்வாடி மைய கட்டிங்களை சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23-ல் அமைந்துள்ள மின்கம்பங்களில் அதிக எண்ணிக்கையில் மின்விளக்குகள் எரியவில்லை. எனவே அவற்றை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 176**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்.31

24-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ப.பனிகுருசு அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24-ல் சிங்காரவேலன் காலனி முதல் பள்ளி பாலம் வரையிலும், ஜோசப் பெனடிக்ட் காலனி முதல் சிங்காரவேலன் காலனி வரையிலும் மற்றும் கடற்கரை சாலை பகுதியை பேவர் பிளாக் சாலையாக மாற்றுவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு கோவில் முன்பாக ஏற்கனவே போடப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலைப்பணி பாதியில் நிறைவுபெற்றுள்ளது. எனவே மேற்படி பகுதியில் சாலைப்பணியினை முழுமையாக மேற்கொள்வதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அந்தோணியார் காலனியில் புதிதாக பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 177**

**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## <u>29.07.2022 ஆம் தேதிய சாதாரண கூட்ட பொருள்கள்</u>

**பொருள் எண் : 1**

இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளுக்கு மின்னணு முறையில் (E Tendering) ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு Bid document &Tender notice ஆகியவற்றை இனையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு Digital signature card தேவைப்படுவதால்,அவசர அவசியம் கருதி, M/S Rain Bow consultancy service, Marthandam நிறுவனம் மூலம் Digital signature card எடுக்கப்பட்ட வகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரு.3000/- ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து திருமதிS.பிரம்மசக்தி, பொதுப்பணி மேற்பார்வையாளருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 812/2022/இ1

**தீர்மானம் எண். 178**

**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சி பொறியியல் பிரிவு கண்காணிப்பு வாகனம் (ஈப்பு) TN.75.K6526-ல் Cultch, Disc, & Yok & Teeth joint star ஆகியவற்றில் பழுது ஏற்பட்டு, வாகனம் சரியாக இயக்க இயலாத நிலை ஏற்பட்டதை தொடர்ந்து, M/S.Akshaya Motors, Unnamalaikadai நிறுவனத்தில் வாகனம் பரிசோதனை செய்யப்பட்டு,பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.15,850/-க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.மேற்படி வாகனம் அலுவலகப் பணிகளுக்கு மிகவும் அத்தியாவசியமானதை கருத்தில் கொண்டு,M/S.Akshaya Motor, Unnamalaikadai நிறுவனம் மூலம் பழுது நீக்கப் பணிகளை ரூ.15,850/-மதிப்பீட்டில் மேற்கொள்ளவதற்கும்,அதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 7057-1/2011/இ1

**தீர்மானம் எண். 179**

**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN.74.V3530-ல் முன் இடது புற கதவில் கண்ணாடி ஏற்றி இறக்க முடியாத வகையில் Door Winder channel துருப்பிடித்து, உடைந்திருந்ததால், அவசர அவசியம் கருதி, M/S.Ganesh Motor Work, Vadasery,Nagercoil நிறுவனம் மூலம் சரி செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.700/- திரு.ராஜகுமார், ஓட்டுநரால் வழங்கப்பட்டுள்ளது.எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: 5030/2010/இ1

**தீர்மானம் எண். 180**

**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரியும் திரு.S.ஏசுதாஸ் பணியில் சேர்ந்து 23/4/22-ல் 25 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளதால் அரசாணை எண்:390 நாள்:7/4/2012-ல் தெரிவித்துள்ளபடி அன்னாருக்கு ஊக்கத்தொகை ரூ.2000/- மற்றும் சான்று வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்:471/2018/எச்1

**தீர்மானம் எண். 181**

**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண்: 5**

இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின்மோட்டார்கள் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில், குடிநீர் ஏற்றப்பட்டு பீளிச்சிங்பவுடர் கலக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது.

அவ்வாறு விநியோகம் செய்யப்பட்டும் குடிநீரில் தகுந்த அளவு பிளிச்சீங் பவுடர் கலக்கப்பட்டு உள்ளதா என்பதை கண்டறிய கூடுதலாக 10 எண்ணம் Chloroscope test Kite-கள் வாங்கிய வகையில் கீழ்காணும் செலவினம் செய்யப்பட்டது.

| **பட்டியல் எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **செலவின விவரம்** | **தொகை(ரூ)** |
|---|---|---|---|
| Co 1000098 | Sujha Surgicals, 37/1-23-9 Bellmark complex,Nagercoil. | Chloroscope sing 10 Nos. | 13000/- |
| | | **Total** | **13000/-** |

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி செய்யப்பட்ட செலவினம் ரூ.13000/- ஐ நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: E2/547/2021

**தீர்மானம் எண். 182**

**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண்: 6**

இந்நகராட்சிக்கு பொறியியல் பிரிவில் புதிய திட்டப்பணிகளுக்கான கருத்துருக்கள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் போது,அது தொடர்பான வரைபடம் (ம) ஆவணங்களை Colour Xerox எடுக்கும் வசதி நகராட்சியில் இல்லாத காரணத்தால், அதிக அளவில் செலவினம் ஏற்பட்டு வருகிறது. மேலும் நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் தெருக்களை அளவீடு செய்வதற்கு Running Tape இல்லாத காரணத்தால், அளவீடு செய்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. இவைகளை தவிர்க்கும் பொருட்டு, அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான Colour Printer மற்றும் Running Tape வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செவவினம் ரூ.25,000/- க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: 856/2022/இ1

**தீர்மானம் எண். 183**

**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண்: 7**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு கடைசி பாலம் முதல் கடற்கரை சந்திப்பு (Beach Junction) வரை உள்ள மாநில நெடுஞ்சாலையில் அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்பட்டு, உயிர் பலிகள் அதிகரித்து வருவதால், அதை தவிர்க்கும் பொருட்டு, பொது மக்கள் நலன் கருதி, வேகத்தடைகள் அமைக்க பொது மக்கள் மற்றும் போக்குவரத்து காவல் துறையினரால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. எனவே கொட்டில்பாடு கடைசி பாலம் முதல் கடற்கரை சந்திப்பு வரை உள்ள மாநில நெடுஞ்சாலையில் இணையும் சிறு பாலங்கள் மற்றும் குறுக்கு சாலைகளின் இருபகுதியிலும் வேகத்தடைகள் அமைக்கவும்,

அதற்கான உத்தேச செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** பொது மக்கள் நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.851/2022/இ1

**தீர்மானம் எண். 184**
**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண்: 8**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக 01.07.2022 ஆம் தேதிய தொலைபேசி செய்தியில், தமிழக அரசின் ஓர் ஆண்டு சாதனையாக இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை ஏதேனும் ஒரு தினசரி நாளிதழில் வெளியிட தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், இந்நகராட்சியில், 2021-2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை தினகரன் நாளிதழின் 05.07.2022 ஆம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணம் ரூ.63,240/- ஐ வழங்க கேட்டு, M/s.KAL Publication (P) Ltd., Nagercoil நிறுவனத்திலிருந்து பட்டியல் எண்.3300360101 நாள்: 05.07.2022 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து சம்மந்தப்பட்ட பத்திரிக்கை நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2045/2018/இ1

**தீர்மானம் எண். 185**
**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண்: 9**

சட்டப்பேரவை விதி 110-ன் கீழ்,மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 19.03.2020-ஆம் தேதிய அறிக்கையின் படி, இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதியில், திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் ஆகியவற்றை நகராட்சி பொது நிதியின் கீழ் அமைப்பதற்கு மன்றத்தீர்மானம்எண்:2424நாள்:30/11/2020-ன்படிமன்றஒப்புதல் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பணியின் பெயர் | மதீப்பீட்டுத்தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | Construction of Yoga centre @ Sasthankarai in Ward No:23 (Sy.No: P2-3/10) | 9,80,000/- |
| 2 | Construction ofGym shed with equipments @ BoundaryRoad near carmelJyothi school in ward:1 ( SY.NO:A1-3/10) | 9,80,000/- |

.

தற்போது மேற்காணும் பணிகள் முழுவதுமாக முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவர தயார் நிலையில் உள்ளது. மேலும் மேற்படி பணிகள் நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், YOGA மற்றும் GYM-ஐ முறையாக பயன்படுத்தி, பராமரிக்கவும், நகராட்சிக்கு வருவாயை ஈட்டுவதற்கு ஏதுவாகவும், குத்தகைக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1337-1/2020/இ1

**தீர்மானம் எண். 186**

**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண்: 10**

இந்நகராட்சியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 'தமிழ் வாழ்க' என்ற வாசகம் அடங்கிய Neon Letter Board எரியாமல் உள்ளதால், அதனை Neon Board Service நிறுவனத்தின் தொழில்நுட்ப பணியாளர் மூலம் பரிசேதனை செய்யப்பட்டதில்,Neon Letter 3 எண்ணம், சரி செய்தல்,Transformer மாற்றம் செய்தல் Board full service செய்தல் மற்றும் Wiring, Painting பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு, 15/7/2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட விலைப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | பணியின் பெயர் | மதீப்பீட்டுத்தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | S.Herbert Durai singh, NO.17/56-2,Vaathikonam, Arumanai & (p.o) | 29,600/- |
| 2 | Imayam stamp & Metal works, Opp. Divines Hotal, TLJ Complex, II nd Floor, Market Road, Marthandam. | 32,300/- |
| 3 | Justin Enterprises, 5/136-1/5/31, Theruvethivilai, Ambalakadai, Chitharal (p.o) | 30,900/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், S.Herbert Durai Singh,Arumanai என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுப் பணி உத்தரவு வழங்கவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கோள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 802-2/2022/இ1

**தீர்மானம் எண். 187**

**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண்: 11**

இந்நகராட்சியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள "குளச்சல் நகராட்சி அலுவலகம்" என்ற வாசகம் பதித்துள்ள Entrance Arch Board எரியாமல் உள்ளதால், LED Board அமைத்தல் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் தொழில்நுட்ப பணியாளர் மூலம் பரிசோதனை செய்யப்பட்டதில், Entrance Arch Board மாற்றி புதிய LED Board அமைக்க தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள Entrance Arch Board மாற்றி புதிய LED Board அமைக்க 15.07.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | பணியின் பெயர் | மதீப்பீட்டுத்தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | S.Herbert Durai singh, NO.17/56-2,Vaathikonam, Arummanai & (p.o) | 35,400/- |
| 2 | Justin Enterprises, 5/136-1/5/31, Theruvethivilai, Ambalakadai, Chitharal (p.o) | 37,500/- |
| 3 | Imayam stamp & Metal works, Opp. Divines Hotal, TLJ Complex, II nd Floor, Market Road, Marthandam | 39,100/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், S.Herbert Durai Singh, Arumanai என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுப் பணி உத்தரவு வழங்கவும் மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கோள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 802-1/2022/இ1

**தீர்மானம் எண். 188**
**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண்: 12**

கன்னியாகுமரி மாவட்டஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்:வ3/36384/2021 நாள்:04.07.2022-ல், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தேடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் மீதான புகார் குறித்த புகார் மனுக்களை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் அனுப்ப வேண்டிய முகவரி குறித்த அறிவிப்பு பலகையை, நகராட்சி அலுவலகத்தில் வைக்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி பொருள் தொடர்பான பலகையை நகராட்சியில் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு, 18.07.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | பணியின் பெயர் | மதீப்பீட்டுத்தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | Justin Enterprises,<br>5/136-1/5/31, Theruvethivilai,<br>Ambalakadai, Chitharal (p.o) | 16,250/- |
| 2 | Imayam stamp & Metal works,<br>Opp. Divines Hotal, TLJ Complex,<br>IIndFloor, MarketRoad, Marthandam | 17,400/- |
| 3 | S.Herbert Durai singh,<br>NO.17/56-2,Vaathikonam,<br>Arummanai & (p.o) | 14,950/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், S.HerbertDurai Singh,Arumanai என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுப் பணி உத்தரவு வழங்கவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கோள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 808/2022/இ1

**தீர்மானம் எண். 189**

**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண்: 13**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடங்கில் அமைந்துள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் கூடத்தில் (MCC) உள்ள உரத் தொட்டிகள், பிளாஸ்டிக் சேகரிக்கும் அறை ஆகியவற்றில் வர்ணம் பூசுதல், Plastic shredding Machine பழுதடைந்துள்ளதை சரி செய்தல், உரக்கிடங்கில் பராமரிக்கப்படும் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவதற்கு தேவையான ¾ (“Hose“) வாங்குதல் மற்றும் உரம் தயாரிக்கும் கூடத்தில் தினந்தோறும் சேகரிக்கப்படும் உரத்தின் அளவுகளை குறிப்பிடுவதற்கு Hylem Sheet- லான Board (8X4Size) அமைத்தல் ஆகிய பணிகளை ரூ.17000/-ம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும்,மேற்படி பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 863/2022/இ1

**தீர்மானம் எண். 190**

**ஒத்தி வைக்கப்பட்டது.**

**பொருள் எண்: 14**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22-ல் பள்ளிரோடு பகுதியில் அமைந்துள்ள கதவு எண்.22-7/1, வரிவிதிப்பு எண்.148/022/00002 திரு.முகம்மது அப்துல் கபூர் என்பவருக்கு சொந்தமான வணிக பயன்பாடு கட்டிடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட திடக்கழிவு மேலாண்மை வரி அரையாண்டிற்கு ரூ.1800/- ஆக உள்ளது. மேற்படி கடைக்கு திடக்கழிவு மேலாண்மை வரி கூடுதலாக உள்ளதால், அரையாண்டு வரி ரூ.600/- ஆக நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 422/2020/எச்1

**தீர்மானம் எண். 191**

**ஒத்தி வைக்கப்பட்டது**

**பொருள் எண்: 15**

இந்நகராட்சிக்குட்பட்ட புதிய வார்டு எண்: **19**-ல் மாதாகாலணி குறுக்கு தெருக்களில், வடிகால் ஓடை நிறைந்து, மழைக்காலங்களில் தண்ணீர் அருகில் உள்ள குடியிருப்புக்களுக்குள் சென்று துர்நாற்றம் வீசி வருகிறது. மேற்படி வடிகால் ஓடை சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டதால், Vent Portion மிகவும் குறுகலாகவும், பக்கசுவர் மற்றும் மேல் மூடி உடைந்தும் காணப்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி, மேற்படி பகுதியில் புதிதாக மூடியுடன் கூடிய வடிகால் ஓடை மற்றும் சிமெண்ட் தளம் அமைக்கும் பணியினை ரூ.5,20,000/-ம் மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: 870/2022/இ1

**தீர்மானம் எண். 192**
**ஒத்தி வைக்கப்பட்டது**

(ஒம்)அ.நசீர்
நகர்மன்றத் தலைவர்,
குளச்சல் நகராட்சி